


# நடத்தப்பட்ட
# பழிவாங்கும் தாக்குதல்கள்

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

# மே 9இல் நடத்தப்பட்ட பழிவாங்கும் தாக்குதல்கள்

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

**ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலையம்**

டிசம்பர் 2022

**பங்களிப்பு செய்தோர்**

| | |
|---|---|
| ஆய்வு உதவி | : சுனேத் கஜநாயக்க/ சமுது பஸ்நாயக்க |
| ஆசிரியர் | : அஜித் பெரகும் ஜயசிங்க |
| மொழிபெயர்ப்பு | : Creative Content Consultants (www.contentlanka.com) |
| காணொளி தொகுப்பு | : கே. சஞ்ஜீவ |
| திட்ட முகாமைத்துவம் | : ரஷ்மிகா விஜேசிங்க |
| மேற்பார்வை | : பிலிப் திஸாநாயக்க |
| வெளியீடு | : ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலையம் |
| அச்சுப்பதிப்பு | : adARTS - மஹரகம |

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 5 |
| சுருக்கம் | 7 |
| ஆய்வுமுறைமை | 9 |
| மே 9 தாக்குதல்களுக்கு வழிவகுத்த விடயங்கள் | 11 |
| மே 9ஆம் திகதி கோட்டாகோகம தாக்குதலுக்கு பின்னரான நிலை | 14 |
| கொலைகள் | 15 |
| சித்திரவதை | 19 |
| சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை | 20 |
| வன்முறை, சட்டம் மற்றும் ஊடகம் | 29 |
| இழப்பீடு | 30 |
| ஆய்வின் பரிந்துரைகள் | 31 |

# முன்னுரை

இலங்கை 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வரலாறு காணாத அளவிற்கு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இது நாட்டில் பாரிய அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. 6.9 மில்லியனுக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடமேறிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் பிரதமரும், இதன் விளைவாக பதவி விலக நேரிட்டது.

#GotaGoHome என்ற தொனிப்பொருளில் பாரிய மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக நாட்டில் கட்டமைப்பு மாற்றம் அவசியம் என்றும், அதனை வழிநடத்துவதற்கு இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் இதில் வலியுறுத்தப்பட்டது. அமைதியான முறையில் நாடு முழுவதும் இடம்பெற்ற இந்த மக்கள் கிளர்ச்சியானது, கடந்த காலத்தில இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சிகளில் இருந்து மாறுபட்ட ஒன்றாகக் காணப்பட்டது. இந்த போராட்டத்தில், இலங்கையின் ஒவ்வொரு பிரிவினரும், வர்க்கம், ஜாதி வேறுபாடுகள் இன்றி கலந்து கொண்டனர். இது நகரவாசிகளின் வானவில் போராட்டம் என்றும் அழைக்கப்பட்டது.

எனினும், இந்த அமைதிவழி போராட்டத்தின் மீது 2022, மே 9ஆம் திகதியன்று நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல் காரணமாக, நிலைமை முற்றிலும் தலைகீழாக மாறியது. இதனால், நாட்டின் பல பகுதிகளில் உயிரிழப்புகள் பதிவாகின. பெருமளவிலான சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. மக்கள் எழுச்சியின் பல தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்ற நிலையில், அவற்றை அங்கீகரிப்பது அவசியம். அந்தவகையில், உண்மையை பாரபட்சமின்றி ஆவணப்படுத்துவது கட்டாயமாகும்.

ரைட் டு லைஃப் மனித உரிமைகளுக்கான நிலையமானது, 2022ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் போது நடந்தேறிய மனித உரிமை மீறல்கள், வன்முறைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து, பதிவுசெய்து, இனங்கண்டு, அதற்கான பரிந்துரைகளை வழங்கும் நோக்கில் தொடர்ச்சியான ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

இங்கு நாம் மூன்று முக்கிய நிகழ்வு ஆய்வுகள் தொடர்பாக கவனஞ்செலுத்துவோம். 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி ரம்புக்கனையில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூடு, 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் போராட்டக்காரர்கள் மீது நடத்திய தாக்குதல் மற்றும் அதேநாளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் என்பனவே அவையாகும்.

இந்த ஆய்வின் ஊடாக, நாம் பொதுக் கொள்கை முடிவுகளில் பொதுமக்களின் பங்களிப்பை உறுதி செய்வதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள், அத்தகைய கொள்கை முடிவுகளை ஆக்கப்பூர்வமாக மறுபரிசீலனை செய்தல், மாற்றத்திற்கான பரிந்துரை, போராடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், அமைதியான போராட்டங்கள், கிளர்ச்சிகளின் போது பின்பற்ற வேண்டிய கொள்கைகள் மற்றும் சட்டம், பொலிஸ் படையின் பயன்பாடு போன்றவை குறித்து கவனம் செலுத்த முயற்சிக்கின்றோம்.

**பிலிப் திஸாநாயக்க**
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
ரைட் டு லைஃப் மனித உரிமைகளுக்கான நிலையம்

# சுருக்கம்


இலங்கை முன்னொருபோதும் சந்தித்திராத அளவிற்கு, 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி உருவாகி வந்தது. இலங்கையின் இறக்குமதி வருமானத்தில் ஏற்பட்ட சரிவு மற்றும் ஏற்றுமதி செலவீனங்களின் அதிகரிப்பு மற்றும் அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவீனங்களுக்கிடையில் பாரிய ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திய நிதிப்பற்றாக்குறை ஆகியவற்றால் ஏற்பட்ட நிலுவைத் தொகையே நெருக்கடியை உருவாக்கியது.

இரசாயன பசளைகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்து 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் காரணமாக விவசாயிகளால் இலங்கையில் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. விவசாயிகளின் எதிர்ப்பு நடவடிக்கை மற்றும் பொதுமக்களின் விமர்சனங்களைத் தொடர்ந்து குறித்த தடை நவம்பர் மாதம் நீக்கப்பட்டது. எனினும், நெல் அறுவடை உள்ளிட்ட விவசாய உற்பத்தியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது.

நீண்டகாலமாக நிலவும் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி, 2021ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் தீவிரமடையவே, 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கமானது ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்கும் வகையிலான சுற்றறிக்கைகளை வெளியிட்டது.

2021ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு பகுதியில் சமையல் எரிவாயு தாங்கிகள் தொடர்ச்சியாக வெடித்தமையானது, இலங்கையில் ஏற்பட்ட மற்றுமொரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்தது. சமையல் எரிவாயு தாங்கி வெடிப்பு காரணமாக ஏழு உயிரிழப்புகளும் கடுமையான விபத்துக்களும் பதிவாகின. ஆனால், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு எவ்வித இழப்பீட்டையும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் வழங்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் கலந்துரையாடல்களை நடத்தி கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென எதிர்க்கட்சியும் பொருளாதார வல்லுநர்களும் 2021ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்மொழிந்தனர். எனினும், சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவது தொடர்பாக நிதியமைச்சில் காணப்பட்ட இருவேறு கருத்துக்கள் காரணமாக இதனை முன்னெடுக்க காலதாமதமானது.

இதேவேளை, ஏப்ரல் முதல் வாரத்தில், நிதியமைச்சர் உள்ளடங்கலான அமைச்சரவையும் மத்திய வங்கியின் ஆளுநரும் இராஜினாமா செய்ததையடுத்து, ஏப்ரல் 12ஆம் திகதி, வெளிநாட்டுக் கடன் சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக இலங்கை அறிவித்தது.

மிரிஹானவில் அமைந்துள்ள அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக இல்லத்தின் முன் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக, பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைகளை பிரயோகித்ததோடு, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் கைதுசெய்தனர். அதே சந்தர்ப்பத்தில், அரசுக்கு எதிரான போராட்டமும் வலுப்பெற்றது. அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி, கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக தொடர்ச்சியான கவனயீர்ப்பு போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு முன்பாக "மைனாகோகம" என்ற பெயரில் இதேபோன்றதொரு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

"கோட்டாகோகம" மற்றும் "மைனாகோகம" ஆகிய பெயர்களினல் அமைக்கப்பட்ட போராட்டப் பகுதிகள் மீது, 2022 மே மாதம் 9ஆம் திகதியன்று, அப்போதைய ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடையவர்கள் மிகவும் மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தினர்.

குறித்த தாக்குதல்களை தடுப்பதற்கு பொலிஸ் தரப்பு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் பல்வேறு தரப்பினருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் கொழும்பு பொலிஸ் பிரிவிற்குப் பொறுப்பான பொலிஸ் மா அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவின் நடவடிக்கைகள் யாவும் பிரச்சினைக்குரியதாக காணப்படுகின்றன.

அமைதிவழி போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட நியாயமற்ற, கொடூரமான தாக்குதல் இதுவாகும் என உடனடியாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. குறித்த தாக்குதலுக்கு எதிராக சமூக ரீதியில் பாரியளவில் அனுதாப அலை ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது. அதே சந்தர்ப்பத்தில், தாக்குதலை நடத்தியவர்களுக்கு எதிரான தாக்குதல்கள், காலிமுகத்திடலில் இருந்தே ஆரம்பமாகின. இது முன்கூட்டியே திட்டமிடப்பட்டதா அல்லது தன்னெழுச்சியாக எழுந்த மக்கள் எழுச்சியா என்ற விடயம் இதுவரை விசாரணைகளில் வெளிவரவில்லை. எனினும், சமூகத்தில் புகைந்துகொண்டிருந்த ஒரு விடயத்தை இந்தச் சம்பவம் வெடிக்கச் செய்ததை அவதானிக்க முடிந்தது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தொடர் பழிவாங்கும் தாக்குதல்கள் பின்னர் ஆட்சிக் கவிழ்ப்பாக மாறியது.

நாட்டின் தென்பகுதியில் உள்ள பல மாவட்டங்களில் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் பதிவாகின. முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அல்லது கோட்டாகோகம தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதோடு, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவரது பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தரும் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். மற்றுமொரு தரப்பினர் காயமடைந்து அவர்கள் தேசிய வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். அத்தோடு, காயமடைந்தவர்களில் சிலரை வைத்தியசாலை ஊழியர்கள் என சந்தேகிக்கப்படும் சிலர் தாக்கியதாகவும் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டது. கோட்டாகோகம மீது தாக்குதல் நடத்தியவர்கள் அல்லது அலரிமாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் நாட்டின் பல பகுதிகளில் வைத்து தாக்கப்பட்டனர். பொது போக்குவரத்து பேருந்துகள் உட்பட அவர்கள் பயணித்த வாகனங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு எரியூட்டப்பட்டன. குறிப்பாக, அப்போதைய ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் வீடுகள், அலுவலகங்கள், வணிக வளாகங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் சேதமாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. இச்சம்பவங்கள் யாவும் மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் உடனடியாக நடந்தேறின. நாட்டின் அப்போது எரிபொருள் பற்றாக்குறை காணப்பட்டது. எனினும், அதன் காரணமாகவோ அல்லது போக்குவரத்து சிரமங்களையோ தாக்குதல் நடத்தியவர்கள் எதிர்கொள்ளவில்லை.

மே மாதம் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் இடம்பெற்ற இந்த வன்முறைச் சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்கு, பொலிஸார் அவ்வளவு பெரிதாக செயற்படவில்லை. இராணுவத்திற்கும் அவசியமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை என்றே தெரிகின்றது.

இந்த தாக்குதல்களில் அநேகமானோர் எவ்வித திட்டமிடல்களும் இன்றி செயற்பட்டதாகவே தோன்றுகின்றது. சிலர் இணையத்தை பயன்படுத்தி சமூக ஊடகங்கள் வாயிலாக வன்முறையை தூண்டும் வகையில் செயற்பட்டனர்.

இதுகுறித்த விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதிகளவிலான சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

# ஆய்வுமுறைமை

தாக்குதலுடன் தொடர்புடைய தரப்பினருடன் நடத்தப்பட்ட நேர்காணல்களில் இருந்து பெறப்பட்ட தகவல்கள், ஊடக அறிக்கைகள், நீதிமன்ற அறிக்கைகள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விடயங்கள், பொலிஸ் மற்றும் ஏனைய துறைகளின் அறிக்கைகள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் பின்னர் அவற்றை விரிவான முறையில் பகுப்பாய்வு செய்யும் முறையே இந்த ஆய்வில் பின்பற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, தெரிவுசெய்யப்பட்ட 20 சம்பவங்களை உள்ளடக்கிய சிறு காணொளிகளும் தயாரிக்கப்பட்டன[1].

காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் மே 9ஆம் திகதியன்று போராட்டக் குழுவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய ஆய்வறிக்கை முன்னர் வழங்கப்பட்டது. அதனோடு தொடர்புபட்ட வகையிலேயே இந்த ஆய்வு அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த தாக்குதல்களுக்கு பதில் வழங்கும் வகையில் இடம்பெற்ற பழிவாங்கும் தாக்குதல்களுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவே இந்த ஆய்வில் கவனம் செலுத்துகின்றோம். சம்பவத்தின் பின்னணி, தாக்குதல்கள் நடத்தப்பட்ட விதம், மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைகள், பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு வழங்கத் தவறியமை, தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்கள், சட்ட அமுலாக்கம், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் உரிமைகள், இழப்பீடு போன்றவை குறித்து அவதானம் செலுத்துவதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

பெறுமதிமிக்க தகவல்களை தம்வசம் கொண்டிருக்கும் சில தரப்பினர் அவற்றை எம்மிடம் தெரிவிக்க முன்வராமை நாம் ஆய்வினை மேற்கொள்கையில் எதிர்கொண்ட பிரதான பிரச்சினையாகும். தம் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படும் என்ற அச்சத்தின் காரணமாகவே அவர்கள் முன்வரவில்லை. தாக்குதல்கள் நடத்தியவர்களின் தரப்புடன் கலந்துரையாடுவதற்கான எவ்வித வாய்ப்பும் கிட்டவில்லை. அதற்கு பதிலாக, தாக்குதல் குறித்த வெளிப்புற அவதானிப்புகளையும் நீதிமன்ற அறிக்கைகளையுமே நாம் நம்பவேண்டியிருந்தது. தாக்குதல் தொடர்பாக ஊடகவியலாளர்களும் ஆர்வலர்களும் முகப்புத்தகத்தில் நேரலையாக வழங்கிய உள்ளடக்கங்கள் தமது சமூக தரங்களுக்கு உட்பட்டவை அல்லவென இணையத்தளங்கள் அவற்றை அகற்றின. இதனால், பெறுமதிமிக்க பல சான்றுகள் அழிக்கப்பட்டன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி பொலிஸாரிடமிருந்து பெற்றுக்கொண்ட உத்தியோகபூர்வ தகவல்களுக்கும் ஆரம்பத்திலிருந்து திரட்டிய தகவல்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க இடைவெளி காணப்பட்டது.

தாக்குதல் குறித்த நீதிமன்ற செயற்பாடுகள் வழமைபோன்று தாமதிப்பதால், இந்த அறிக்கையை எழுதும் சந்தர்ப்பத்தில் எந்த வழக்கும் நிறைவுசெய்யப்படவில்லை.

இந்த ஆய்வின் அடிப்படை மொழியாக சிங்களம் பயன்படுத்தப்பட்டது. முதலாவது அறிக்கை சிங்கள மொழியில் தொகுக்கப்பட்டு, பின்னர் அது ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

1. Visit www.Aithiya.lk and https://www.youtube.com/@aithiyamedia2463

## மே 9 தாக்குதல்களுக்கு வழிவகுத்த விடயங்கள்

இரசாயன பசளைகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்து 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் காரணமாக விவசாயிகளால் இலங்கையில் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. விவசாயிகளின் எதிர்ப்பு நடவடிக்கை மற்றும் பொதுமக்களின் விமர்சனங்களைத் தொடர்ந்து குறித்த தடை நவம்பர் மாதம் நீக்கப்பட்டது. எனினும், நெல் அறுவடை உள்ளிட்ட விவசாய உற்பத்தியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. உணவுப் பொருட்களின் விலை அதிகரித்தது. அத்தியாவசிய உணவுப்பொருட்களின் இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி தட்டுப்பாடானது, மக்களின் வாழ்க்கையை வெகுவாக பாதிக்க ஆரம்பித்தது. இதற்கிடையில், சர்க்கரை, தேங்காய் எண்ணெய் போன்றவற்றின் மீதான வரி குறைப்பு குறித்து அரசாங்கம் மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டதாக குற்றஞ்சுமத்தப்பட்டது. பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்தன.

கொவிட் தொற்றுநோய் காரணமாக, 2021ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அப்போது நிகழ்நிலை கற்பித்தலை புறக்கணிக்க ஜுலை மாதம் 12ஆம் திகதிமுதல் ஆசிரியர் சங்கங்கள் தீர்மானித்தன. நீண்டகாலமாக நிலவி வரும் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு கோரி நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களின் போராட்டம் ஒன்றும் இடம்பெற்றது. 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி பாடசாலைகளை மீள ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்த சந்தர்ப்பத்திலும், சம்பளப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வுகாணப்படவில்லை. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கும் சுற்றறிக்கைகளை 2022ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அரசாங்கம் வெளியிட்டது[2].

2022ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு பகுதியில் சமையல் எரிவாயு தாங்கிகள் வெடித்தமை இலங்கை எதிர்கொண்ட மற்றுமொரு பாரிய பிரச்சினையாகக் காணப்பட்டது. மௌபிம பத்திரிகையின் ஊடகவியலாளரான உதேனி சமன்குமார குறிப்பிடுகையில், “எரிவாயு தாங்கிகள் வெடித்த விபத்துக்களில் சிக்கி ஏழு மரணங்கள் சம்பவித்துள்ளன, 16 பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டமை தொடர்பாக 18 சம்பவங்கள் பதிவாகின” என்றார். 2019ஆம் ஆண்டு 78 சமையல் எரிவாயு விபத்துக்கள் பதிவாகின. 2020ஆம் ஆண்டு 31 விபத்துக்களும் 2021ஆம் ஆண்டு 847 விபத்துக்களும் பதிவாகின. இதனை மேலும் விளக்கிக் கூறினால், லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினால் 2021ஆம் ஆண்டு சந்தையில் விற்பனைக்காக அனுப்பப்பட்ட 2.8 மில்லியன் எரிவாயு கொள்கலன்களில் 797 கொள்கலன்கள் விபத்துக்குள்ளாகின. ஆனால், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு லிட்ரோ எரிவாயு நிறுவனம் எவ்வித இழப்பீடுகளையும் வழங்கவில்லை.[3]

கொவிட் தொற்றுநோய் காரணமாக, 2020ஆம் ஆண்டில் இலங்கையின் உள்நாட்டு உற்பத்தி 3.5 வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆனால், 2021ஆம் ஆண்டு 3.3 வீதத்தினால் அதிகரித்துள்ளது[4]. கடன் தரமதிப்பீடுகள் குறைக்கப்பட்டதன் காரணமாக சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான அணுகலை இலங்கை இழந்தது மற்றும் அதன் வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவதற்கு உத்தியோகபூர்வ இருப்புகளைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்தோடு, வங்கித் துறையின் கடன்களைப் பயன்படுத்தி இறக்குமதிகளுக்குத் தொடர்ந்து பணம் செலுத்த வேண்டியிருந்தது. உத்தியோகபூர்வ கையிருப்பானது, 2019ஆம் ஆண்டு 7.6 பில்லியன் டொலர்களாகக் காணப்பட்ட நிலையில், 2022ஆம் ஆண்டு ஜுன் மாதம் 400 மில்லியன் டொலர்களாக குறைவடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இருந்து, அந்நியச் செலாவணி பணப்புழக்கக் கட்டுப்பாடுகள் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தேவையான எரிபொருள், மருந்துகள், திரவ எரிவாயு மற்றும் உள்ளீடுகள் ஆகியவற்றிற்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டது. மணிக்கணக்கில் மின்வெட்டு நீடித்தது. மத்திய வங்கியின் அப்போதைய ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் அப்போதைய நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் ஏப்ரல் முதல் வாரத்தில் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர். புதிய நிதியமைச்சராக அலி சப்ரியும், மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால் வீரசிங்கவும் நியமிக்கப்பட்டனர்.

---

2. https://www.themorning.lk/teachers-salary-circular-finally-issued/
3. Mawbima newspaper, 18 June 2022
4. National Output, Expenditure and Income, 2022, Central Bank of Sri Lanka

வெளிநாட்டு கடன் சேவையை இடைநிறுத்துவதாக, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி மத்திய வங்கியின் புதிய ஆளுநர் அறிவித்தார். அதன் பின்னர், கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு சட்ட மற்றும் நிதி ஆலோசகர்களை நியமித்தார். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டியின் படி, 2022ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து பணவீக்கம் மிக வேகமாக அதிகரித்து, செப்டெம்பர் மாம் 64.1 வீதமாக அதிகரித்தது[5].

2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டார். எனினும், பொருளாதார நெருக்கடி தொடர்ந்துசெல்வதோடு. அரசியல் பதட்டநிலைகள் அதிகமாகவே உள்ளன. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2022ஆம் ஆண்டின் இறுதியில் 9.2 வீதமாகவும் 2023 இல் மேலும் 4.2 வீதமாகவும் குறையுமென உலக வங்கி கணிப்பிட்டுள்ளது[6].

2022ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக முன்னொருபோதும் இல்லாத வகையில் மக்கள் எழுச்சி ஏற்பட்டது. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இந்த மக்கள் எழுச்சி பரவியதோடு, அங்கும் பல்வேறு பொது நடவடிக்கைகள் இடம்பெற்றன.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி பொதுமக்கள் பல இடங்களில் போராட்டங்களை முன்னெடுத்தனர். கொழும்பின் புறநகர் பகுதியான மிரிஹானவில் அமைந்துள்ள, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக இல்லத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக, பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைகளை பிரயோகித்ததோடு, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் கைதுசெய்தனர். இந்த சம்பவத்தோடு, அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான எதிர்ப்பு வலுவடைந்தது. அதன் நீட்சியாக கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தின் முன் வாயிலை ஆக்கிரமித்து தொடர் போராட்டமொன்று ஆரம்பமானது. அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்றும், தற்போதைய அரசியல் யாப்பை மாற்றியமைக்குமாறும் அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், ஆர்ப்பாட்டக் களத்தில் கூடாரங்களையும் கொட்டில்களையும் அமைத்து அந்த இடத்தை “கோட்டாகோகம“ என பெயரிட்டனர். அன்று முதல், ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதிவரை கோட்டாகோகம ஆர்ப்பாட்டக் களம் அமைந்திருந்தது. பின்னர், பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு முன்பாகவும், கண்டி, காலி, குருநாகல், அநுராதபுரம் போன்ற இடங்களிலும் இவ்வாறான போராட்டக் களங்களை நிறுவி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டக் களத்திற்கு “மைனாகோகம” என பெயரிடப்பட்டது. இப்போராட்டத்தின் ஆரம்பத்தில், #GotaGoHome என்ற ஹேஷ்டெக் பயன்படுத்தப்பட்டு சமூக வலைத்தளங்கள் மூலம் பரப்பப்பட்டது.

குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்து தோன்றிய அமைதியான போராட்டங்கள் பெரும்பாலும் அமைதியானவையாக இருந்தபோதும், பின்னர் அவை ஓரளவு ஆக்ரோஷமாக மாற்றம் பெற்றது. எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள், பொது இடங்களை ஆக்கிரமித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காலி முகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து அதனை பிரதான போராட்டத் தளமாக்கினர்.

குறித்த காலப்பகுதியில், ஆயிரக்கணக்கான மக்கள் இந்த போராட்டத்தில் இணைந்தனர். மேலும், அடக்குமுறைகள், மனித உரிமை மீறல்கள், தாக்குதல்கள் மற்றும் சித்திரவதைகள் உள்ளிட்ட பல சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

5. https://www.cbsl.gov.lk/en/measures-of-consumer-price-inflation
6. Sri Lanka Development Update, October-2022, World Bank

எரிபொருள் தட்டுப்பாட்டினை கண்டித்து, கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கனை பிரதேசத்தில் ஏப்ரல் 19ஆம் திகதி பொதுமக்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற குழப்பத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 13 பொதுமக்களும் 20 பொலிஸ் உத்தியோகத்தர்களும் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்[7].

அவற்றுள் மே 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்கள், அரசியல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. குறித்த சம்பவங்களை இரண்டாக வகைப்படுத்தலாம். ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த கோட்டாகோகம என்ற போராட்டத் தளத்தின் மீது, 2022 மே 9ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடைய கட்சிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக முன்னர் ஒரு ஆவணம் தயாரிக்கப்பட்டது. குறித்த சம்பவத்தின் பின்னர் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், வன்முறைகள் மற்றும் ஜனநாயகத்தின் மீதான கரிசனை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையளிப்பதே இந்த ஆவணத்தின் நோக்கமாகும்.

7. https://www.bbc.com/sinhala/sri-lanka-61150034

# மே 9ஆம் திகதி கோட்டாகோகம தாக்குதலுக்கு பின்னரான நிலை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாட்டாளர்கள் சிலர் 2022 மே மாதம் 9ஆம் திகதி பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையில் ஒன்றுகூடினர். பின்னர், பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு அருகே அமைக்கப்பட்டிருந்த “மைனாகோகம“ என்ற போராட்டத் தளத்தின் மீதும், காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த “கோட்டாகோகம“ என்ற போராட்டத் தளத்தின் மீதும் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதல்களின் போது அதிகளவான மக்கள் காயமடைந்தனர். அத்தோடு, போராட்டத் தளத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள், பிரச்சார உபகரணங்கள் மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்குச் சொந்தமான உடமைகள் யாவும் அழிக்கப்பட்டன. இந்த சம்பவங்கள் யாவும் தொலைக்காட்சிகள் வழியாகவும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன. இதே சந்தர்ப்பத்தில், குறித்த தாக்குதலுக்கு பதிலடியாக பழிவாங்கும் நடவடிக்கை காலி முகத்திடலில் ஆரம்பித்து, பின்னர் நாடு முழுவதும் வேகமாக பரவியது. மே 9, 10 மற்றும் அதற்கு அண்மித்த நாட்களின் இடம்பெற்ற பதில் தாக்குதல்களில் சில குறிப்பிடத்தக்க அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- கோட்டாகோகம மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்த செய்திகளை பிரதான ஊடகங்களும் சமூக ஊடகங்களும் பரபரப்பாக வெளியிட்டன.
- பொதுமக்களின் வெறுப்பை தூண்டும் வகையில் பிரதான ஊடகங்களும் சமூக ஊடகங்களும் செயற்பட்டன. அத்தோடு, தாக்குதல்கள், இலக்குகள் மற்றும் வழிகள் பற்றிய தகவல்களை பரப்பின.
- பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்குபற்றியதன் பின்னர், பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு முன்பாகவும், ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாகவும் உள்ள போராட்ட தளங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள், பின்னர் அந்த இடங்களிலேயே வைத்து தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர்.
- தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்பட்ட ஏனைய நபர்களும் துன்புறுத்தப்பட்டனர்.
- அலரிமாளிகையில் இடம்பெற்ற கூட்டத்திற்கு மக்களை ஏற்றிச்சென்றதாக சந்தேகிக்கப்பட்ட பேருந்துகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, கவிழ்க்கப்பட்டன. சேதம் விளைவிக்கப்பட்டன. சிலவற்றிற்கு தீவைத்தனர்.
- அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்ற பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி, இந்த கூட்டத்திலோ தாக்குதலிலோ தொடர்புபடாத உறுப்பினர்களின் வீடுகள், அலுவலகங்கள், வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.
- ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி போன்ற ஏனைய அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தாக்கப்பட்டனர்.
- குறுகிய காலப்பகுதிக்குள் இந்த தாக்குதல்கள் மிக வேகமாக நடந்தேறின. நாட்டில் காணப்படும் எரிபொருள் பிரச்சினையும் போக்குவரத்து சிக்கல்களும், தாக்குதல்தாரிகளுக்கு ஒரு தடையாக காணப்படவில்லை.
- இந்த தாக்குதல்களின் பின்னணியில் திட்டமிடப்பட்ட நபர்கள் இருந்தனர் என சிலர் குற்றஞ்சாட்டினர். போராட்டத்துடன் தொடர்புடைய அரசியல் கட்சிகள் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர் என சிலர் குற்றஞ்சாட்டினர். எனினும், குறித்த குற்றச்சாட்டுக்களை அந்த அரசியல் கட்சிகள் மறுத்துள்ளன[8].
- தாக்குதல் நடத்தியவர்களில் சிலர் மதுபோதையில் இருந்தனர் என குற்றஞ்சாட்டப்பட்டது. அவர்கள் மீது திருட்டு மற்றும் ஏனைய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.
- கொலைகள், வன்முறைகள், சொத்துக்கள் அழித்தமை போன்ற செயற்பாடுகளை தடுக்க பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினர் உரிய வகையில் செயற்படவில்லை.
- விசாரணைகளில் ஏற்பட்டுள்ள காலதாமதம், குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை செயற்படுத்துவதில் காணப்படும் பயனற்ற தன்மை மற்றும் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தாமை.

8. Silumina newspaper, 9 July 2022

## கொலைகள்

| | பெயர் | பதவி நிலை | குற்றம் இடம்பெற்ற இடம் | இறப்பிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| 01 | அமரகீர்த்தி அத்துகோரள (57) | பாராளுமன்ற உறுப்பினர் (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன) | நிட்டம்புவ நகரம் | கடுமையான அடிகாயங்கள் |
| 02 | ஜயந்த குணவர்தன | பொலிஸ் உத்தியோகத்தர் – பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் | நிட்டம்புவ நகரம் | கடுமையான அடி மற்றும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் |
| 03 | ஹர்ஷ நதீஷ பெரேரா (27) | கலேலிய, மீரிகம பகுதியைச் சேர்ந்த சிறு வர்த்தகர் | நிட்டம்புவ நகரம் | துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் |
| 04 | ஏ. வி. சரத் குமார | இம்மாதுவ பிரதேச சபைத் தலைவர் | இம்மாதுவ | கும்பல் ஒன்றினால் அவரது வீடு தாக்கப்பட்ட போது ஏற்பட்ட மாரடைப்பினால் மரணம் |
| 05 | எம். என். மொஹமட் நஸீர் (32) | யக்கஸ்முல்ல, வீரகெட்டிய பகுதியைச் சேர்ந்தவர் | வீரகெட்டிய | வீரக்கெட்டிய பிரதேச சபை தலைவரின் வீட்டிற்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் மரணம் |
| 06 | ஆர். ஜி. சுகத் ஜனக | வலஸ்முல்ல பகுதியிலுள்ள அரசாங்க பாடசாலையொன்றின் சித்திர ஆசிரியர் | வீரகெட்டிய | வீரக்கெட்டிய பிரதேச சபைத் தலைவரின் வீட்டிற்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் மரணம் |
| 07 | பிரியந்த குமார (21) | மினுவாங்கொடையைச் சேர்ந்த ஒருவர் | நீர்கொழும்பு | நீர்கொழும்பிலுள்ள அவென்ரா கார்டன் ஹோட்டலுக்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் மரணம் |
| 08 | ஷெஹான் உதயங்க (19) | நீர்கொழும்பைச் சேர்ந்த ஒருவர் | நீர்கொழும்பு | நீர்கொழும்பிலுள்ள அவென்ரா கார்டன் ஹோட்டலுக்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் மரணம் |

**பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரான பொலிஸ் உத்தியோகத்தர் நிட்டம்புவ பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்டமை**

அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவும், அவரது சாரதியும், அவரது பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தரும் (பொலிஸ்) 2022 மே மாதம் 9ஆம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் தமது உத்தியோகபூர்வ வாகனத்தில் கொழும்பை நோக்கி புறப்பட்டனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட இந்தக் குழு, நண்பகல் அளவிலேயே அலரி மாளிகையை விட்டு வெளியில் வந்தது. பின்னர், கொழும்பிலுள்ள அமைச்சர் சிறிபால கம்லத்தின் வீட்டில் மதிய உணவை உண்டுவிட்டு பிற்பகல் 2.30 மணியளவில் பொலன்னறுவையை நோக்கிச் சென்றுள்ளனர். நிட்டம்புவ நகரில் அன்றைய தினம் வன்முறையில் ஈடுபட்ட நபர்களால் குறித்த குழுவினர் பயணித்த கார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அப்போது, பாராளுமன்ற உறுப்பினரும் அவரது குழுவினரும் திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டுவிட்டு திரும்பி வருவதாகக் கூறியுள்ளனர்.

2012ஆம் ஆண்டுமுதல் அமரகீர்த்தி அத்துகோரளவின் சாரதியாக எச். ஐ. ஜி. சமன்குமார பணியாற்றி வந்துள்ளார்.

பொலன்னறுவையிலுள்ளபுதியநகர்பகுதியில்அவர்வசிக்கின்றார்.மேமாதம்9ஆம்திகதிபிற்பகல்3-3.30மணிக்கிடையில் வழியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனத்தை மறித்து இடையூறு ஏற்படுத்தியதால், அமரகீர்த்தி அத்துகோரள உள்ளிட்டோர் பயணித்த வாகனத்தை நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் சாரதிக்கு ஏற்பட்டது. வாகனத்தை நிறுத்தியவுடன், அமரகீர்த்தி அத்துகோரளவின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தரான சார்ஜன்ட் ஜயந்த குணவர்தனவை ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவர் வாகனத்திலிருந்து வெளியே இழுத்து தடியால் தாக்கியுள்ளார். வாகனத்தின் முன் இருக்கையில் அமர்ந்திருந்த அத்துகோரளவை மற்றுமொரு ஆர்ப்பாட்டக்காரர் வெளியே இழுத்துச் சென்றுள்ளார். பாராளுமன்ற உறுப்பினரிடம் அங்கிருந்த குழு கேள்வி எழுப்பிக்கொண்டிருந்தபோது, போராட்டக்காரர் ஒருவர் அவரை தடியால் தாக்கியுள்ளார். இச்சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், காரில் இருந்த ஏனையோர் அதிலிருந்து இறங்கி கலைந்து சென்றுவிட்டனர்.




சமன்குமாரவின் கூற்றுப்படி, மூன்று தடவைகள் துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டுள்ளது. அதனோடு, ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றுள்ளனர். அப்போது அமரகீர்த்தி அத்துகோரளவும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரான குணவர்தனவும் நடைபாதை வழியாக ஓடிச்சென்று நிட்டம்புவ நகரிலுள்ள நிஹால் பேஷன் என்ற புடைவைக் கடைக்குள் நுழைந்துள்ளனர். வீதியில் ஓடி ஒளிய முற்பட்ட வேளையில், சமன்குமாரவை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீண்டும் பிடித்து தாக்கியுள்ளனர். அதில் அவரது தலையில் காயம் ஏற்பட்டதை அவதானித்த ஒருவர், அவரை அழைத்துச் சென்றுள்ளார. மே 9ஆம் திகதி இரவு அவர் நிட்டம்புவ பேருந்து டிப்போவில் தங்கியிருந்தார். அவரை காப்பாற்றிய நபர் மறுநாள், அதாவது மே 10ஆம் திகதி அவரை நிட்டம்புவ பொலிஸில் ஒப்படைத்துள்ளார். அவரது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் மனைவியின் ஏடிஎம் அட்டை ஆகியன உள்ளடங்கலான பணப்பையை போராட்டக்காரர்கள் திருடிச்சென்றுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர் தனது துப்பாக்கியால் சுட்டபோது ஒருவர் உயிரிழந்தார். இதனையடுத்து நிலைமை மேலும் மோசமடைந்தது. அதன் தொடர்ச்சியாக குறித்த புடைவைக் கடைக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள நிஹால் பேஷன் புடைவைக் கடையில் இருந்தபோது, பொலிஸ் பாதுகாப்பை கோர முப்பது நிமிடங்கள் முயற்சித்த போதிலும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பொறுப்புடன் பதிலளிக்கவில்லை. அந்தவகையில், பொலிஸாரின் அலட்சியமே தனது தந்தையின் கொலைக்கு வழிவகுத்ததாக அமைச்சரின் மகன் ரனிந்து அத்துகோரள குறிப்பிடுகின்றார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்புகொண்ட போதும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிபால கம்லத் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் பிரத்தியேக செயலாளர் நிஷாந்த விதானகே ஆகியோர் கூறினர்.




2022 ஜுன் 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சிறிபால கம்லத் இவ்வாறு குறிப்பிட்டார்: “பாராளுமன்ற உறுப்பினர் சிக்கியுள்ளார் என்றும் அவரைப் பாதுகாக்க வேண்டும் என்றும் நாம் கொலை நடந்த தினத்தன்று பொலிஸாருக்கு அறிவித்தோம். எனினும், அவருக்கு எந்த ரீதியிலும் பாதுகாப்பு கிடைக்காத காரணத்தினாலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என நான் கூறுவேன்.”

நிஹால் பேஷன் புடைவைக் கடைக்குள் நுழைந்த கும்பல், பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்த துப்பாக்கியை கைப்பற்றியது. பின்னர், குறித்த கும்பல் அவர்களை தாக்கி, தலைகீழாக அவர்களை படிக்கட்டுகள் வழியாக இழுத்து வருவதையும் சமூக ஊடகங்களில் வெளியான காணொளிகளில் காணக்கூடியதாக இருந்தது.

**ஹர்ஷ நதீஷன் ஜயவீரவின் கொலை**

கடந்த மே மாதம் 9ஆம் திகதி நிட்டம்புவ நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், மீரிகம, கலேலிய பகுதியைச் சேர்ந்த ஹர்ஷ நதீஷன் ஜயவீர என்ற 27 வயதான திருமணமான நபர் உயிரிழந்தார். அவர் எந்தவொரு போராட்டத்துக்கும் ஆதரவளிக்கவில்லை எனவும், தனது மோட்டார் சைக்கிளுக்கான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக அன்றைய தினம் நிட்டம்புவ நகருக்குச் சென்றதாகவும் உயிரிழந்த நபரின் தாய் தெரிவித்துள்ளார். மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்தல், பழுதுபார்த்தல் மற்றும் விற்பனை செய்யும் தொழிலை ஹர்ஷ செய்துவந்துள்ளார்.

குறித்த மரணங்கள் தொடர்பான விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் கே.பி.டி. அபேரத்ன முன்னெடுத்ததோடு, மறுநாள், அதாவது மே 10ஆம் திகதி அதுகுறித்த தகவல்களை அத்தனகல நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

குற்றச் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அத்தனகல இலக்கம் 2 நீதவான் சென்று, பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் சடலங்களை பார்வையிட்டார். அத்தோடு, வத்துப்பிட்டிய ஆதார வைத்தியசாலைக்குச் சென்று மீரிகம பிரதேசத்தில் உயிரிழந்த இளைஞனின் சடலத்தைப் பார்வையிட்டதோடு, மூன்று சடலங்களையும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

கடுமையான தாக்குதலினால் ஏற்பட்ட உள் இரத்தப்போக்கே, பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் உயிரிழப்பிற்கு காரணம் என வத்துபிட்டிய ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய ஆலோசகர் ரமேஷ் அழகியவண்ண மேற்கொண்ட பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினரின் உடம்பில் பல்வேறு காயங்கள் காணப்படுவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினருடன் உயிரிழந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜயந்த குணவர்தனவின் பிரேத பரிசோதனையில், அவரது மார்பில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கி ரவை அவரது நுரையீரல் வழியாகச் சென்று உடலை விட்டு வெளிச்சென்றுள்ளது. தாக்குதலில், அவரது மண்டையோட்டிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. அத்தோடு, பாதுகாப்பு உத்தியோகத்தரான சார்ஜன்டின் உடம்பில் பல்வேறு காயங்கள் காணப்பட்டதாகவும் மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் செயற்படும், கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

குறித்ததாக்குதல்சம்பவம்தொடர்பாககடந்தமேமாதம்26ஆம்திகதிவரை14சந்தேகநபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களில் இருவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. உயிரிழந்த பாராளுமன்ற உறுப்பினரின் சாரதியை, இரண்டு சந்தேகநபர்கள் மின்கம்பத்தில் கட்டிவைத்து தாக்கியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். அதன் பின்னர், அவரிடமிருந்து திருடப்பட்ட ஏடிஎம் அட்டையைப் பயன்படுத்தி சுமார் 250,000 ரூபாய் பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்துள்ளனர். தமக்கு தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, தாம் கொள்வனவு செய்த சில பொருட்களை சந்தேகநபர்கள் விற்பனை செய்துள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார் .

குறித்த கொலைக்குற்றம் தொடர்பாக கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிவரை 37 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர், பாராளுமன்ற உறுப்பினர் அணிந்திருந்த தங்க நகைகளை திருடிச் சென்றனர் என்ற சந்தேகத்தில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தரிடமிருந்து திருடப்பட்ட துப்பாக்கியை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த கொலைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களை கூறியுள்ளனர்.

“இந்த வழக்கு அத்தனல நீதிமன்றத்தில் இடம்பெறுகின்றது. இதனை கையாளும் விதத்தில் ஒருவித சந்தேகம் எழுகின்றது. இதுகுறித்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் கோரிக்கையொன்றை முன்வைக்க எதிர்ப்பார்க்கின்றோம்” என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்த கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: “நான் மே மாதம் 22ஆம் திகதி அத்தனகல நீதவான் நீதிமன்றத்திற்குச் சென்றபோது, ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும் தொழில்சார் சட்டத்தரணி என்ற ரீதியிலும் ஒரு துரதிஷ்டவசமான நிலைமையை அவதானித்தேன். கொலைகள் தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்கு உதவும் வகையில் ஒரு கற்றறிந்த நீதவான் செயற்பட வேண்டும். ஆனால், விசாரணை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களை சங்கடப்படுத்தும் வகையில், திறந்த மன்றில் அத்தனகல நீதவான் நடந்துகொண்டார்” என்றார்.

நிட்டம்புவவில் இடம்பெற்ற கொலைகளுக்கு மேலதிகமாக வீரகெட்டிய, நீர்கொழும்பு மற்றும் இம்மாதுவ ஆகிய பிரதேசங்களிலும் மரணங்கள் நிகழ்ந்துள்ளன. தனது வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் மாரடைப்பு ஏற்பட்டு, வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற சந்தர்ப்பத்தில் இம்மாதுவ பிரதேச சபையின் தவிசாளர் உயிரிழந்தார்[10]. மேலும், வீரகெட்டிய பிரதேச சபையின் தலைவர் பியசேன திஸாநாயக்கவின் வீட்டிற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் வீரகெட்டிய, யக்கஸ்முல்லவை வசிப்பிடமாகக் கொண்ட 32 வயதான எம்.என். முஹம்மட் நஸீர் உயிரிழந்தார். அத்தோடு, ஹக்குருவெல, வீரகெட்டிய பகுதியைச் சேர்ந்த ஆர். ஜி. சுகத் ஜானக, வலஸ்முல்லையில் உள்ள அரச பாடசாலையொன்றின் சித்திர ஆசிரியர் ஒருவரும் கொல்லப்பட்டனர். இருவருக்கும் தலா மூன்று குழந்தைகள் உள்ளனர்[11].

நீர்கொழும்பு அவென்ரா கார்டன்ஸ் ஹோட்டலுக்கு அருகில் இருவர் உயிரிழந்துள்ளனர். அதன் பிரகாரம், கடந்த மே மாதம் 9ஆம் திகதி வன்முறை காரணமாக உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 7 ஆகும்.

10. https://si.rata.lk/25851/
11. Silumina newspaper

## சித்திரவதை

### ஐக்கிய மக்கள் சக்தி (எதிர்க்கட்சி) பாராளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம மீதான தாக்குதல்

மே 9ஆம் திகதி காலை கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான குமார வெல்கம, மத்துகமவில் உள்ள தனது வீட்டிற்குச் செல்வதற்காக தனது சாரதி மற்றும் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தருடன் கொட்டாவ, மாக்கும்புர நெடுஞ்சாலை நுழைவாயிலுக்குச் சென்றார். இரவு 8 மணியளவில் அவர் மாக்கும்புர சந்தியை சென்றடைந்தபோது, மோட்டார் சைக்கிளொன்று அவரது வாகனத்தை மறித்தது. அங்கு சுமார் 300-400 பேர் கூடியிருந்தனர். பின்னர், சாரதியை தாக்கி வாகனத்திலிருந்து அவரை தூக்கி எறிந்தனர். வாகனம் மரக்கட்டையால் தாக்கப்பட்டதோடு, கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. அப்போது வெல்கம, இடதுபக்க முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அவரை தாக்குதலில் இருந்து காப்பாற்றுவதற்கு அவரது மெய்ப்பாதுகாவலர் முயற்சித்தார். அப்போது மெய்ப்பாதுகாவலரை வெளியே இழுத்தமையால், கார் கதவு தானாக பூட்டிக்கொண்டது. ஆனால், சாரதியின் பக்கம் கதவு திறந்திருந்தமையால் அதன் வழியாக தடியொன்று எறியப்பட்டது. அது குமார் வெல்கமவை பதம் பார்த்தது. அவர் பலத்த காயங்களுக்குள்ளாகி வாகனத்திற்குள் இரத்த வெள்ளத்தில் துடித்தார்.

அப்போது வாகனம் தீப்பற்றிக்கொண்டதாக வெல்கமவிடம் ஒருவர் கூறியதையடுத்து, வாகனத்திலிருந்து இறங்குவதற்கு உதவுமாறு பாராளுமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டார். அப்போது ஒரு இளைஞன் இரும்புக் கம்பியால் வாகனத்தின் கதவை உடைத்து பாராளுமன்ற உறுப்பினரை வாகனத்திலிருந்து நடைபாதைக்கு அழைத்துச் சென்றார்.

அச்சந்தர்ப்பத்தில் கார் தீப்பிடித்து எரிந்ததாகவும், உள்ளாடையை தவிர தான் அணிந்திருந்த ஏனைய ஆடைகள் யாவும் கிழிந்துவிட்டதாகவும் வெல்கம கூறியுள்ளார். அவரைக் காப்பாற்றிய இளைஞனையும் அங்குள்ளவர்கள் தாக்கியுள்ளனர். எவ்வாறாயினும், குறித்த இளைஞன் வெல்கமவை அங்கிருந்து ஒருவாறு காப்பாற்றிச்சென்று முச்சக்கரவண்டியில் ஏற்றி ஹோமாகம வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளார்[12].

கோட்டாகோகமவை தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் நடைபாதை வியாபாரிகள் சங்கத் தலைவருமான மஹிந்த கஹந்தகமகேயின் வீடும் தாக்கப்பட்டது. அவரையும் பிடித்து ஆடைகளை கிழித்து தாக்கியுள்ளனர். தன்னை வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லுமாறு தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் அவர் கோரியமை, சமூக வலைத்தளங்களில் பிரபல நகைச்சுவை பேசுபொருளாக மாறியது[13].

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடைய ஆசிரியர் சங்கத்தின் தலைவரான வசந்த ஹந்தபாங்கொட, ஆண்களும் பெண்களும் அடங்கிய குழுவினரால் சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பான காணொளிகளும் வெளியாகியிருந்தன. பிரபல சிங்களப் பாடலான “ஹந்தபானே... ஹந்தபானே” என்ற பாடலைப் பயன்படுத்தி இந்த துன்புறுத்தலை கேலி செய்த காணொளியும் சமூக வலைதளங்களில் பரவியது[14].

கோட்டாகோகம தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் ஒரு குழுவினர் தாக்கப்பட்டு காலி முகத்திடலுக்கு அருகில் அழுக்கு நீர் செல்லும் பெய்ரா ஏரியில் வீசப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். அது தொடர்பான காணொளியை பயன்படுத்தி, “பஸ சீத்தல கங்குலே பீன பீன நாமுகோ சுது” என்ற பாடலுடன் கோர்த்து தொகுக்கப்பட்டு சமூக வலைத்தளங்களில் பரவியது[15].

பதில் தாக்குதல்களில் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றபோது, நோயாளர் தள்ளுவண்டியில் இருந்தவர்களை வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் என நம்பப்படுவோர் உள்ளடங்கலான சிலர் தாக்கியுள்ளனர்[16]. நோயாளிகளுக்கு எதிரான வன்முறையைத் தடுக்க சில வைத்தியர்கள் துணிச்சலுடன் போராடினர். தேசிய வைத்தியசாலைக்கு அருகாமையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் வஞ்சிக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது[17].

பொலிஸாருக்கு எதிரான உடல்ரீதியான வன்முறை மிகவும் அரிதாகவே காணப்பட்டது. எனினும், இந்த செயற்பாடுகளின்போது பொலிஸார் மற்றும் இராணுவத்திற்கு எதிராக எதிர்ப்பாளர்கள் வாய்மொழி வசைபாடல்களில் ஈடுபட்டனர்.

---

12. https://youtu.be/FskQPLde2Xc
13. https://www.youtube.com/watch?v=KiVmaIVv2GU
14. https://www.youtube.com/watch?v=h5Twkrr82X0
15. https://www.youtube.com/shorts/9B_8j-jnTug
16. https://www.youtube.com/watch?v=Xr62VUrLf5w
17. https://www.youtube.com/watch?v=ju973Q0fj2s

# சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை

2022மே மாதம் 9ஆம் திகதி மாலை வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன. உடைமைகளை அழித்து, தீவைக்கும் சம்பவங்கள் ஆரம்பமாகின. அப்போது தலைநகர் கொழும்பில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் மாலையாகும்போது நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது. எனினும், வன்முறை பரவுவதை கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால், ஊரடங்கு உத்தரவிற்கு மத்தியிலும் தாக்குதல்தாரிகள் நாசகார செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இதன்போது 58 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள் என 75 பேரின் வீடுகளும் அலுவலகங்களும் சேதமாக்கப்பட்டன. தாக்குதலில் ஈடுபட்ட கும்பல், வாகனங்களுக்கு தீ மூட்டி பாரிய அழிவை ஏற்படுத்தியது.

### மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்கள் மீதான தாக்குதல்

வீடுகள், அலுவலகங்கள், வாகனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் அழிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரம்: அப்போதைய அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, ரமேஸ் பத்திரண, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரசன்ன ரணதுங்க, பந்துல குணவர்தன, கெஹெலிய ரம்புக்வெல, காமினி லொக்குகே, விமல் வீரவன்ச, பஷில் ராஜபக்ஷ, பவித்ரா வன்னியாராச்சி, ஷெஹான் சேமசிங்க, காஞ்சன விஜேசேகர, நஸீர் அஹமட், தினேஷ் குணவர்தன, விதுர விக்ரமநாயக்க, நாலக கொடஹேவா, ஜனக பண்டார தென்னகோன், பிரமித பண்டார தென்னகோன், எஸ்.எம். சந்திரசேன, சன்ன ஜயசுமன, கனக ஹேரத், முன்னாள் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான அருந்திக பெர்னாண்டோ, மொஹான் சில்வா, சஷேந்திர ராஜபக்ஷ, சனத் நிஷாந்த, சாந்த பண்டார, குணபால ரத்னசேகர, சிறிபால கம்லத், டி.வி. ஹேரத், நிமல் லன்சா, துமிந்த திஸாநாயக்க, கீதா குமாரசிங்க, அசோக பிரியந்த, ரோஹண திஸாநாயக்க, மிலான் ஜயதிலக, கோகிலா ஹர்ஷனி குணவர்தன, உத்திக பிரேமரத்ன, அலி சப்ரி ரஹீம், சம்பத் அத்துகோரள, சனத் பிரதீப் விதாரண, டபிள்யூ. டி. வீரசிங்க, சமன்பிரிய ஹேரத், அனுப பாஸ்குவல், ராஜித விக்ரமசிங்க, ஜகத் குமார, திஸ்ஸ குட்டியாராச்சி, சந்திம வீரக்கொடி, ஜயந்த கட்டகொட, பிரேம்நாத் தொலவத்த, நிபுண ரணவக்க, சஞ்சீவ எதிரிமான்ன மற்றும் லலித் வரன்குமார.



மே 9ஆம் திகதி காலை அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் முக்கிய பங்காற்றிய குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் வீடு தாக்கப்பட்டு, சேதப்படுத்தப்பட்டு, தீவைக்கப்பட்டது. அத்தோடு, அவருக்கு நெருக்கமானவர் என கருதப்படும் குருநாகல் மேயர் துஷார சஞ்ஜீவவின் வீடும் தீ வைத்து சேதமாக்கப்பட்டது. லக்கல பிரதேசத்தில் அமைந்திருந்த, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்குச் சொந்தமான பண்ணையிலிருந்த விலங்குகள் காட்டுக்குள் விடப்பட்டு பின்னர் பண்ணை அழிக்கப்பட்டது. தலங்கம வேவா வீதியில் அமைந்திருந்த, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்குச் சொந்தமான வீடு மே 10ஆம் திகதி இரவு முற்றாக எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டது. குருநாகலில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்குச் சொந்தமான அலுவலகங்கள் மற்றும் வணிக வளாகங்கள், போத்தல் கிடங்கு மற்றும் மதுபான தொழிற்சாலை என்பனவும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. அமைதிவழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலின் போது சனத் நிஷாந்த காலி முகத்திடலில் காணப்பட்டார். அவரது சகோதரர் ஜகத் சமந்தவின் வீடும் கடுமையாக சேதமாக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்குச் சொந்தமாக உடுகம்பொலவில் அமைக்கப்பட்டிருந்த வீடும் தாக்கப்பட்டு எரியூட்டப்பட்டது. வீட்டின் முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சுமார் 25 மோட்டார் சைக்கிள் தீக்கிரையாகின. 1977ஆம்

ஆண்டும், இங்கு அமைக்கப்பட்டிருந்த ரணதுங்க குடும்பத்திற்குச் சொந்தமான வீடு அரசியல் வன்முறை காரணமாக தீவைத்து எரிக்கப்பட்டது.

குருநாகலில் அமைந்திருந்த, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சொந்தமான வீடும் தீக்கிரையாக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தனது அலுவலகத்தை அனுராதபுரம் மாநகர சபையின் குடியிருப்பு பகுதிக்கு சொந்தமான வீட்டில் நடத்திவந்த நிலையில், அதன் மீதும் கற்கள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தாக்கப்பட்டார். அத்தோடு, அவரது மகனுக்கும் மகளுக்கும் சொந்தமான மூன்று வீடுகளும் சேதமாக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் விஜேமான்ன, விஜேபால ஹெட்டியாராச்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் வீடுகள் மற்றும் அலுவலகங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கபில திஸாநாயக்கவுக்குச் சொந்தமாக மெதமுலனவில் அமைக்கப்பட்டிருந்த வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தோடு, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் உபாலி கொடிகாரவிற்குச் சொந்தமாக உடஹமுல்லவில் காணப்பட்ட வீடு கடுமையாக சேதமாக்கப்பட்டது.

மொறட்டுவ மேயர் சமன் லால் பெர்னாண்டோவின் வீட்டின் மீது தீவைக்கப்பட்டதோடு, கடுமையாக சேதமடைந்தது. வன்முறையில் ஈடுபட்ட கும்பல் மொறட்டுவ மாநகர சபை, மேயர் அலுவலகம் மற்றும் அதன் வாகனங்கள் சிலவற்றையும் தீயிட்டு எரித்து, பாரிய சேதத்தை விளைவித்துள்ளது.

தம்புள்ள மேயர் ஜாலிய ஓபதவின் வீடு மற்றும் அவரது தாயினதும் சகோதரரதும் வீடுகளும் எரித்து அழிக்கப்பட்டன.

சொத்து சேதத்திற்கு முகங்கொடுத்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்:

காலி மேயர் பிரியந்த சஹபந்து, ஹொரண மேயர் விதரமகே சிறிசோம, மினுவாங்கொட மாநகர சபை தலைவர் நீல் ஜயசேகர, மினுவாங்கொட பிரதேச சபையின் தலைவர் குமார அரங்கல்ல, வலல்லாவிட்ட பிரதேச சபையின் தலைவர் உதேனி அத்துகோரள, போப்பே போத்தல பிரதேச சபையின் தலைவர் தில்ருக் அபேகோன், ஆனமடுவ பிரதேச சபையின் தலைவர் பிரியந்த, எல்பிட்டிய பிரதேச சபையின் தலைவர் கருணாசேன பொன்னம்பெரும, கரந்தெனிய பிரதேச சபைத் தலைவர் காமினி அமரவன்ச, அம்பலாங்கொட பிரதேச சபைத் தலைவர் புஷ்பலால் குமாரசிங்க, பண்டாரகம பிரதேச சபைத் தலைவர் தேவேந்திர பெரேரா, கம்பஹா மேயர் எரங்க சேனாநாயக்க, பன்னல பிரதேச சபைத் தலைவர் ரஞ்சித் லங்சக்கார, கெஸ்பேவ மேயர் லக்ஸ்மன் பெரேரா, கட்டன பிரதேச சபைத் தலைவர் குமார அரங்கல்ல, பிங்கிரிய பிரதேச சபைத் தலைவர் திமுத் துஷார ஏக்கநாயக்க, பலாங்கொடை பிரதேச சபைத் தலைவர் சுனில் பிரேமசிறி, புத்தளம் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் நிமல் பமுனு ஆராச்சி, அநுராதபுரம் மேயர் எச். பி. சோமதாச, பத்தேகம நகர சபையின் உப தலைவர் அனுர நாரங்கொட, தெவிநுவர பிரதேச தலைவர் சபா சுஜீவ வெதகே, நீர்கொழும்பு பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரோஹண, நீர்கொழும்பு மேயர் தயான் லன்சா, பியகம பிரதேச சபையின் உப தலைவர் அஜித் குமார, கம்பஹா பிரதேச சபையின் உப தலைவர் ரஞ்சித் குணவர்தன மற்றும் பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள்.

காலிமுகத்திடல் போராட்டத்தில் பெண் ஒருவரை தாக்கியதாக கூறப்படும் சீதாவக கூட்டுறவு சங்கத்தின் தலைவரது வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அவிசாவளை தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி ரவீந்திர ஜயசிங்கவின் வீட்டிற்கும் தீவைத்து சேதமாக்கப்பட்டது. வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.

ரஞ்சித் தனது அலுவலகமாக பயன்படுத்திவந்த வீட்டின் மீது கற்கள் எறியப்பட்டு கடுமையாக சேதமாக்கப்பட்டது.

வீரகெட்டிய பிரதேச சபையின் தலைவர் பியசேன திஸாநாயக்கவின் மெதமுலன இல்லத்தின் மீது சிலர் தாக்குதல் நடத்த வந்தபோது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். அவரது வீடு முற்றாக தீவைத்து எரிக்கப்பட்டது.

இம்மாதுவ உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஏ.வி. சரத் குமாரவின் வீட்டின் மீது சிலர் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதன்போது காயமடைந்த அவர், காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

கண்டி நகரில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் மாநகர சபை உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான போகம்பர பகுதியிலுள்ள வீடும் தாக்குதலில் சேதமடைந்துள்ளது.

கல்வீச்சு தாக்குதலுக்கு உள்ளான பல உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வீரகெட்டிய பிரதேச சபையின் தவிசாளர் பியசேன லியனாராச்சிக்கு சொந்தமாக, மெதமுலனவில் அமைந்திருந்த வீட்டிற்கருகில் கும்பலொன்று தீவைக்க முற்பட்டுள்ளது. இதன்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்தனர்.

ரத்கம பிரதேச சபை தலைவரது வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கலவரத்தில் ஈடுபட்டோரிடமிருந்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவலவின் வீட்டை அப்பிரதேசவாசிகள் காப்பாற்றியுள்ளனர். அவர், குறித்த கட்சியின் பண்டாரகம தொகுதியின் அமைப்பாளர் ஆவார்.

மேலும், போபே பொஹொத்தல உள்ளூராட்சி சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் பிரேமலால் அபேசேகரவின் வீடும் மே மாதம் 9ஆம் திகதி தாக்கப்பட்டது .

ஐக்கிய மக்கள் சக்தியின் அக்மீமன தொகுதியின் பிரதான அமைப்பாளர் பி. எச். விஜேபாலவின் வீடு மே 9ஆம் திகதி இரவு 9.15 மணியளவில் கும்பலொன்றினால் தாக்குதலுக்குள்ளானது.

**மூலம்**

https://www.newsfirst.lk/2022/05/10/heres-a-list-of-slpp-politico-property-destroyed-so-far/

http://www.themorning.lk/slpp-releases-list-of-mps-properties-destroyed-in-mondays-violence/

https://youtu.be/XOchIm50sls

https://youtu.be/iayCm86ISkg

https://youtu.be/JXzC_3lAS-E

**ராஜபக்ஷ குடும்பத்தாரின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம்**












அம்பாந்தோட்டை மற்றும் ஏனைய மாவட்டங்களில் ராஜபக்ஷ குடும்பத்தாருக்கு சொந்தமாக காணப்பட்ட பல சொத்துக்களுக்கு பாரிய சேதம் விளைவிக்கப்பட்டது. அவற்றில் கடந்த காலங்களில் நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த மெதமுலனை சந்தியில் நிறுவப்பட்ட டி. ஏ. ராஜபக்ஷ மற்றும் தந்தினா சமரசிங்க திஸாநாயக்கவின் நினைவுச் சின்னமும் அழிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்ட இந்த நினைவுச் சின்னம், 81.3 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான காலஞ்சென்ற டி. ஏ. ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவியான காலஞ்சென்ற தந்தினா சமரசிங்க திஸாநாயக்க ஆகியோர், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசியல்வாதிகளான பஷில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெற்றோர் ஆவர்.

தங்காலை நகரில் நிறுவப்பட்டிருந்த டி.ஏ. ராஜபக்ஷவின் சிலையும் கீழே தள்ளப்பட்டு அழிக்கப்பட்டது.

வீரகெட்டிய கார்ல்டன் பிரதேசத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பயன்படுத்திய வீட்டின் மீது கற்கள் வீசப்பட்டுள்ளதுடன், தாக்குதல் நடத்த வந்தவர்கள், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்திற்கும் தீ மூட்டியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, மெதமுலன மன்சந்தி பகுதியில் அமைந்துள்ள, சமல் ராஜபக்ஷவின் மனைவியின் சகோதரரான தென் மாகாண சபை உறுப்பினர் கபில திஸாநாயக்கவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. குறித்த மூன்று மாடிகள் கொண்ட வீடு தீயில் கருகி நாசமாகியது.




இதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் வீரகெட்டியில் உள்ள கார்ல்டன் பிரதேசத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பயன்படுத்திய வீட்டின் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியதுடன் தோட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்திற்கும் தீ வைத்தனர்.

முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கு சொந்தமான பல சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டன. திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவில் திஸ்ஸமஹாராம, தெபரவெவ, சேனபுரவில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் வீடும் அலுவலகமும், அதேபோன்று, கிரிந்த பொலிஸ் பிரிவில் மகம, கிரிந்த என்ற இடத்தில் அமைந்துள்ள மற்றுமொரு வீடும் தீவைத்து சேதமாக்கப்பட்டன. குறித்த வீடுகளில் காணப்பட்ட நெல், உரம் போன்றவை களவாடப்பட்டன.

ராஜபக்ஷ குடும்பத்தினருடன் நெருக்கமாக பணியாற்றிய ஆதரவாளர்கள் மற்றும் உள்ளூராட்சி தலைவர்கள் தாக்கப்பட்டனர். தங்காலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெலியத்த வீதியில் அமைந்துள்ள கார்ல்டன் வீட்டினை கடந்த 10 ஆம் திகதி இரவு 7 மணியளவில் சுமார் 50 இளைஞர்கள் கொண்ட குழுவொன்று தாக்கி தீ வைத்துள்ளது. தங்காலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மெதகெட்டிய வீதியில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வுக்கு சொந்தமான கட்டி முடிக்கப்படாத மூன்று மாடி ஹோட்டலுக்கு மே 10ஆம் திகதி காலை தீமூட்டப்பட்டது.



இதற்கு மேலதிகமாக, இரத்தினபுரி மாவட்டத்தின் சிங்கராஜா வனப்பகுதியை ஒட்டிய கொங்கல மலையடிவாரத்தில் இருபது ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டிருந்த, யோஷித ராஜபக்ஷவுக்கு சொந்தமான ஹோட்டல் வளாகம் மே 10ஆம் திகதி தீயிட்டு அழிக்கப்பட்டது.



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு சொந்தமானதென கூறப்படும், மல்வானை பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வீட்டையும் போராட்டக்காரர்கள் தாக்கி எரியூட்டி அழித்தனர்.

**மூலம்**

2022 May 14 Silumina newspaper
https://youtu.be/FoADLOUhR6E
https://youtu.be/F0mqQ13tIZM

## பொதுப் போக்குவரத்திற்கு ஏற்படுத்தப்பட்ட சேதம்

அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டத்திற்கு மக்களை ஏற்றிச் சென்ற பேருந்துகள் மீதான தாக்குதல்கள் காரணமாக மே 9ஆம் திகதி சுமார் 50 பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டதாகவும் அவற்றில் 38 பேருந்துகள் முழுமையாக சேதப்படுத்தப்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாகவும் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கமுனு விஜேரத்ன சுட்டிக்காட்டினார்.



குறித்த பேருந்துகள் யாவும் தனியார் பயணங்களுக்காக வாடகை அடிப்படையிலேயே வழங்கப்பட்டதாகவும், இது தமது வர்த்தக நடவடிக்கையின் ஒரு பகுதி என்றும் தெரிவித்தார். உயிரற்ற பொருட்களை இவ்வாறு தேசப்படுத்துவது பயனற்ற செயற்பாடென தெரிவித்த கெமுன விஜேரத்ன, இது குறித்து ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், அவற்றின் பிரதிகள் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். பேருந்துகளை கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விலையான 3.8 முதல் 4 மில்லியன் ஷரூபாய் வரையிலேயே குறித்த பேருந்துகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், இத்தாக்குதல் காரணமாக அழிவை சந்தித்த பேருந்து உரிமையாளர்கள் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். காப்புறுதி செய்யப்பட்டுள்ளபோதும் புதிய பேருந்துகளை கொள்வனவு செய்ய முடியாதுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இத்தாக்குதல்களின் போது பேருந்து சாரதிகளும் நடத்துநர்களும் தாக்கப்பட்டுள்ளனர். உயிரிழப்புகள் ஏற்படாத போதும், சில பேருந்து ஊழியர்கள் கடுமையாக வதைக்கப்பட்டுள்ளதாக கெமுனு குறிப்பிட்டார். குறிப்பாக, எப்பாவல பிரதேசத்தில் பேருந்து ஊழியர் ஒருவரின் முழங்கால் எலும்புகள் முறியும் அளவிற்கு அவர் மீது பாரிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார்.



குறித்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக ஏராளமான காணொளி ஆதாரங்கள் உள்ள நிலையில், அவற்றின் ஊடாக குற்றவாளிகளை பொலிஸார் கைதுசெய்வார்களாயின், குற்றவாளிகளுக்கு எதிராக சிவில் வழக்குகள் மூலம் நட்டஈடு கோரப்படுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

**மூலம்**

https://youtu.be/cNzeJ35pcuA

## வர்த்தக ஸ்தாபனங்களுக்கு சேதம் விளைவித்தமை

### நீர்கொழும்பு அவென்ரா கார்டன் ஹோட்டலுக்கு சேதம் விளைவித்தமை[19]

மே 9ஆம் திகதி மற்றும் அதனை அண்மித்த நாட்களின் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற தீ வைத்தல் செயற்பாடு மற்றும் கொள்ளையினால், நீர்கொழும்பின் சுற்றுலா நகரில் அமைந்துள்ள அவென்ரா ஹோட்டல் கடுமையாக பாதிக்கப்பட்டது. மே 9ஆம் திகதி சுமார் ஆயிரம் பேரடங்கிய கும்பலொன்று ஹோட்டலுக்குள் புகுந்து வளாகம் முழுவதையும் தீயிட்டு எரித்தது. மற்றுமொரு கும்பல் மறுநாள் ஹோட்டலுக்குள் புகுந்து பெறுமதிமிக்க பொருட்கள், தங்கம், ரூபாய் நோட்டுக்கள்

19. https://youtu.be/SKpifS82X3Q



மற்றும் டொலர்களை களவாடிச் சென்றுள்ளது. படுக்கை விரிப்புகள், நாட்காலிகள், மேசைகள் மற்றும் ஏனைய விலையுயர்ந்த பொருட்களை மக்கள் வாகனத்தில் ஏற்றிச்செல்லும் போது காணொளியாக பதிவுசெய்யப்பட்டு, அவை இலத்திரனியல் ஊடகங்களில் ஒளிபரப்பப்பட்டன.

அவென்ரா ஹோட்டல் வளாகத்தை தீயிட்டு எரித்ததோடு இருக்காமல், நீர்கொழும்பிலுள்ள மிகப்பெரிய உணவகங்களில் ஒன்றான பேஃப்ரொன்ட் சுற்றுலா ஹோட்டலுக்கும் குறித்த கும்பல் தீவைத்தது. குறித்த ஹோட்டல் உரிமையாளருக்குச் சொந்தமாக, டெம்பிள் வீதியில் புதிதாக கட்டப்பட்டிருந்த வீட்டினையும் அந்தக் கும்பல் எரித்தது.



நீர்கொழும்பு மஹா ஹுனுப்பிட்டியவில் அமைந்துள்ள அவென்ரா ஹோட்டல் குழுமத்தின் உரிமையாளர் தனேஷ் டி சில்வா இதுபற்றி குறிப்பிடுகையில், “அன்று நான் எனது பிள்ளைகளுடன் வீட்டில் இருந்தேன். அப்போது தொலைபேசியில் என்னை தொடர்புகொண்ட ஒருவர், மேயரின் வீட்டினை தாக்கிய பின்னர் எம்மை தாக்குவதற்காக கும்பலொன்று வருவதாகவும் உடனே அங்கிருந்து வெளியேறுமாறும் குறிப்பிட்டார். இதுகுறித்து நான் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு தொலைபேசியில் அறிவித்தேன். அப்போது, போதிய பொலிஸார் இல்லாவிட்டாலும் பொலிஸாரை அனுப்புவதாக குறிப்பிட்டார்.

“அதே சந்தர்ப்பத்தில் ஹோட்டலில் இருந்த வாகனங்களை முடிந்தளவு வெளியே அனுப்பிவிட்டேன். அங்கிருந்த ஏனையோரையும் அனுப்பிவிட்டேன். ஹம்மர் ரக வாகனமொன்றும் மற்றுமொரு வாகனமும் குழந்தைகளை ஏற்றிச்சென்ற பின்னர், லம்போர்கினி வாகனமொன்றும் ஹம்மர் ஜீப் ஒன்றும் ஹோட்டலில் இருந்தன. அவற்றினை நான் ஹோட்டல் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தினேன். நிலைமை இந்தளவு மோசமாக அமையுமென நான் நினைக்கவில்லை. நான் வீட்டில் இருந்தபோது, அங்கிருக்க வேண்டாம் என்றும் வெளியே சென்றுவிடுவோம் என்றும் அங்கு பணியாளர்களாக இருந்தவர்கள் குறிப்பிட்டனர்.

“அவர்கள் எதனையும் விட்டுவைக்காமல் முழு ஹோட்டலையும் நாசமாக்கினர். அங்கு 12 வாகனங்கள் இருந்தன. ஹம்மர் வாகனமும் ஏனைய வாகனங்களும் வீதிக்கு கொண்டுவரப்பட்டு எரியூட்டப்பட்டன. அதன் பின்னர், குறித்த கும்பல்





ஹோட்டலை சூறையாடியுள்ளது. ஆகவே. நாங்கள் அணிந்திருந்த உடைகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

“நான்கு பெட்டகங்கள் உடைக்கப்பட்டன. ஐந்து அடி உயரமுள்ள மூன்று பெரிய பெட்டகங்கள் உடைக்கப்பட்டன. முகாமையாளரின் பெட்டகத்தை சைக்கிளில் ஏற்றிச்சென்ற சந்தர்ப்பத்தில் சைக்கிள் டயர் உடைந்துள்ளது. அதன் பின்னர், லொறியில் ஏற்றிச்சென்றுள்ளனர். அதில் ஒருநாள் வருமானம் காணப்பட்டது. கணக்காளரின் பெட்டகம் உடைக்கப்பட்டு அதில் காணப்பட்ட 1.8 மில்லியன் ரூபாய் பணம் திருடப்பட்டது. முகாமையாளரின் பெட்டகத்தில் 4 மில்லியன் ரூபாய்க்கு அதிகமான பணம் காணப்பட்டது. எனது பெட்டகத்தில் சுமார் 35 மில்லியன் ரூபாய் பணம் இருந்தது. 200,000இற்கும் அதிகமான அமெரிக்க டொலர்கள் மற்றும் 35,000இற்கும் அதிகமான யூரோக்கள் இருந்தன. 200 பவுணுக்கும் அதிகமான தங்கம் களவாடப்பட்டுள்ளது. ஹோட்டலில் இருந்த சகல பெட்டகங்களையும் உடைத்து பணத்தை திருடியுள்ளனர். எனது மனைவி மற்றும் குழந்தைகளின் சுமார் 10 முதல் 15 கைக்கடிகாரங்கள் திருடப்பட்டன. அவற்றை எடுத்துச் சென்றவர்களிடம் இருந்து பின்னர் மூன்று கைக்கடிகாரங்கள் பெறப்பட்டன. அவ்வாறான ஒரு கைக்கடிகாரத்தில் பெறுமதி சுமார் 800,000 ரூபாய் ஆகும்.



“ஐந்து ஏக்கர் நிலத்தில் கடந்த 2008ஆம் ஆண்டு இந்த தொழிலை ஆரம்பித்தேன். இதில் 37 அறைகளும் மூன்று அரங்குகளும் உள்ளன. மாநாட்டு அறைகள், உணவகம், குளங்கள், சலூன் மற்றும் முன்னால் அமைந்திருந்த உணவகம் என அனைத்திற்கும் தீவைக்கப்பட்டிருந்தன. நான் சம்பாதித்த பணத்தில்தான் இவற்றைக் கட்டினேன். என்னைத்தவிர இதற்கு வேறு யாரும் ஒரு ரூபாயும் முதலீடு செய்யவில்லை. வங்கிகளிடம் இருந்து பெறப்பட்ட கடன்களே மூலதனம். இந்த சம்பவத்தினால் எனக்கு இரண்டு பில்லியன் ஷரூபாவிற்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளது.

“வென்னப்புவ மற்றும் ஹிக்கடுவயில் எனக்குச் சொந்தமான இரண்டு ஹோட்டல்கள் உள்ளன. அவற்றிற்கு எந்த சேதமும் விளைவிக்கவில்லை. ஏன் இதனை தாக்கினார்கள் என என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. வர்த்தக ரீதியில் எனக்கு தொழில் விரோதிகள் என யாரும் கிடையாது. இது திட்டமிட்ட குற்றச்செயலாகும். வெறுப்பின் காரணமாக மக்கள் இதனை செய்துள்ளனர். ஆனால், நான் எந்த பிழையும் செய்யவில்லை”

நீர்கொழும்பில் மாத்திரமன்றி, அன்றைய தினம் இலங்கை முழுவதும் பொலிஸார் செயற்பட்ட விதம் குறித்து வருந்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். பொலிஸார் உரிய முறையில் செயற்பட்டிருந்தால் நஷ்டத்தை குறைத்திருக்க முடியும். எனினும், நடவடிக்கை எடுக்காமல் இவ்வாறு செயற்படுவதற்கு பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் யாரேனும் அறிவுறுத்தினார்களா என்ற சந்தேகம் தனக்கு காணப்படுவதாகவும் அவென்ரா ஹோட்டல் குழுமத்தின் உரிமையாளர் கூறினார்.

தான் அரசியலில் ஈடுபடவில்லை என்றும் அரசியலில் ஈடுபடும் ஒருசிலருடன் நட்புறவை பேணி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த ஹோட்டல் நீர்கொழும்பு மேயர் தயான் லன்சாவுக்குச் சொந்தமானது என்றும் அது ராஜபக்ஷ குடும்பத்துடன் தொடர்புடையது என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் நிலவியது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் சிகேரா நான்கு பொலிஸ் குழுக்களை நியமித்துள்ளார். உளவுத்துறையினரின் அறிக்கையின் பிரகாரம் ஒன்றரை மாதங்களில் சுமார் 120 பேர் கைது செய்யப்பட்டனர். கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், இவர்களே ஹோட்டலை கொள்ளையிட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது. கொள்ளையிடப்பட்ட ஏராளமான சொத்துக்கள், விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்டன. அத்தோடு, ஹோட்டலில் இருந்து திருடிச் செல்லப்பட்ட ஒரு பெரிய லொறியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நாசகார செயற்பாடு காரணமாக நூற்றிற்கும் அதிகமான ஹோட்டல் பணியாளர்கள் தொழிலை இழந்துள்ளனர்.

## டீன் சந்தியில் இடம்பெற்ற இனவாத செயற்பாடு

மே 9 சம்பவத்தின்போது இனவாத செயற்பாடுகள் குறைவாகவே காணப்பட்டன. எனினும், நீர்கொழும்பு டீன் சந்தி பகுதியில் இடம்பெற்ற வன்முறையில் இனவாத போக்கு காணப்பட்டது[20].

வாள்கள், கத்திகள் மற்றும் தடிகளுடன் பெருமளவான மக்கள் டீன் சந்தியை நோக்கி வந்ததாகவும், கிறிஸ்தவ பாதிரியார்கள் தலையிட்டு நிலைமையை கட்டுப்படுத்த முயன்றபோதும் தடுக்க முடியாமல் போய்விட்டதாகவும் சம்பவத்தை நேரில் கண்ட ராஜேன் பெர்னாண்டோ குறிப்பிட்டார். குறித்த வன்முறை கும்பல், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களை நோக்கி கல்வீச்சு தாக்குதல் நடத்தியுள்ளது. இதன்போது அவர்களது சொத்துக்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. டீன் சந்தியில் அப்போது நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்கள் முஸ்லிம்களுக்கு சொந்தமானதென கருதி, அவற்றை தீயிட்டு எரித்தனர்.







தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள், ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலைய இணையத்தளத்தில் உள்ளன[21].

20. https://youtu.be/sA6Ds3DWEIA
21. www.right2life.lk

# வன்முறை, சட்டம் மற்றும் ஊடகம்

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற போராட்டம் மற்றும் வன்முறைச் சூழல்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவிக்கையில், நாட்டின் பிரஜைகளது அடிப்படை உரிமைகளுக்காக செயற்படுவதை ஒரு சமூகப் பொறுப்பாக சட்டத்தரணிகள் சங்கம் கருதுவதாகவும் அந்த உரிமைகள் மீறப்படும்போது தலையிடுவதாகவும் குறிப்பிட்டார். போராட்டங்கள் அமைதியாகவும் சட்டத்திற்கு உட்பட்டதாகவும் நடத்தப்படும் பட்சத்தில் மாத்திரமே அவர்கள் தலையிடுவார்கள் என சட்டத்தரணிகள் சங்கம் கூறியது.

எந்த வகையிலேனும் வன்முறைகள் இடம்பெற்றால், அது போராட்டத்தின் நோக்கத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவே அமையும் என சட்டத்தரணிகள் சங்கம் விசேடமாக குறிப்பிட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சட்டத்தரணிகள் சங்கத்தின் பல உறுப்பினர்களின் வீடுகளும் கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு மத்தியில் தாக்கப்பட்டன. வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது, பொலிஸ் மா அதிபர் ஊடாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சட்ட நடவடிக்கை எடுத்தது.

பொலிஸ்துறை என்பது மக்களுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளை அமைதியான முறையில் தடுப்பதற்கு சட்ட கட்டமைப்பின் கீழ் பொதுமக்களின் பங்களிப்பு தேவைப்படும் ஒரு நிறுவனமாக இருப்பதால், அது மக்கள் தொடர்பாடலின் ஒரு அடையாளமாக இருக்க வேண்டுமென ஆசிய மனித உரிமைகள் மையத்தின் சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். எனினும், பொலிஸார் கடந்த 9ஆம் திகதி தமது கடமையை செய்யவில்லை. மற்றும் சட்டத்தினால் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை புறந்தள்ளி ஒருசிலரின் கட்டளைகளுக்கு அடிபணிந்து செயற்பட்டனர் எனவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

"அலரி மாளிகைக்கு மே மாதம் 9ஆம் திகதி வந்த கூட்டத்தை பொலிஸார் எளிதாக கட்டுப்படுத்தியிருக்கலாம். அதனைச் செய்திருந்தால், அதற்கு பின்னரான சம்பவங்கள் நடந்திருக்காது. ஆகவே, மே 9ஆம் திகதி மற்றும் அதற்குப் பின்னராக சகல வன்முறைச் சம்பவங்களுக்கும் பொலிஸாரே பொறுப்பு. பொலிஸார் பொறுப்புடன் செயற்படாத காரணத்தினால், கட்டுப்படுத்தக்கூடிய சம்பவங்கள் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாக மாறியது. பொலிஸாரின் தலையீடு தேவைப்படும் பட்சத்தில் அதனை செய்யத் தவறுவது குற்றச்செயலாகும்"

"மனித குலம் தோன்றியது முதல் போராட்டமும் இடம்பெற்று வருகின்றது. 21ஆம் நூற்றாண்டில் போராட்டக் களத்தில் ஒரு முக்கிய அம்சமாக புதிய ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்கள், நுழைந்துள்ளன என வெகுஜன ஊடகத்துறை பேராசிரியர் டியூடர் வீரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். உலகம் முழுவதும் பரவி, சிதறி வாழும் மக்களை ஒன்றிணைக்கும் வகையில் டிஜிட்டல் தொழிநுட்பம் களம் அமைத்துக் கொடுத்துள்ளது. அதனடிப்படையில், இந்த போராட்டமானது இணையம் மற்றும் சமூக ஊடக கட்டமைப்பிற்குள் வந்துள்ளது. ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தீர்க்கமான காரணியாக இந்த மெய்நிகர் தளம் காணப்படுகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டில் இடம்பெற்ற இந்த போராட்டம் இரண்டு அம்சங்களை சுட்டிக்காட்டியது. முதலாவது, நாட்டின் நாற்பது ஆண்டுகால புதிய-தாராளமயக் கொள்கைகளின் விளைவாக ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி மற்றும் ஆளும் மேல்வர்க்கத்தினரின் திறனற்ற ஆளுகையால் ஏற்படும் பிரச்சினைகளும் பொருட்களுக்கான கட்டுப்பாடுகளுமாகும். மக்கள் தாம் எதிர்நோக்கிய பிரச்சினைகள் காரணமாக சமூக வலைத்தளங்கள் மூலம் திரண்டு போராட்டத்தை ஆரம்பித்தனர். சமூக மாற்றம் ஏற்படும் போது தலைமைத்துவம், கருத்தியல் மற்றும் நோக்கம் இருக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார். எனினும், இந்த போராட்டங்களுக்கு சிறந்த யோசனையோ பொதுவான குறிக்கோளோ காணப்படவில்லை. நாளாந்தம் மக்கள் இணைவதற்கான நோக்கங்கள் காணப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒன்றுதிரட்டும் செயற்பாட்டில் சமூக ஊடகத் தளம் முக்கிய அம்சமாக காணப்பட்டது மற்றும் இது உலகளாவிய போராட்டங்களின் சமீபத்திய வடிவமாகும் என்பது பேராசிரியர் டியூடர் வீரசிங்கவின் கருத்தாகும்.

# இழப்பீடு

2022 மே மாதம் 9ஆம் திகதி நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட வன்முறையால் சில பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளும் ஏனைய சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன. குறித்த சேதங்களுக்கு அரசாங்கம் இழப்பீடு வழங்கவேண்டுமென அமைச்சரவையில் தீர்மானம் எட்டப்பட்ட நிலையில், அதற்கெதிராக அரசியல் கட்சிகளும் ஊடகங்களும் குரல் எழுப்பின. சொத்துக்களுக்கு உரிமையாளர்களான குறித்த அரசியல்வாதிகள், அந்த சொத்துக்களை எவ்வாறு கொள்வனவு செய்தனர் என்பது தொடர்பாக விசாரணை நடத்தவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

உதாரணமாக, ஹிரு செய்தி இணையத்தளம் இவ்வாறு செய்தி வெளியிட்டது[22]. “அழிவடைந்த சொத்துக்களின் பெறுமதியை விட அதிகளவான மதிப்பீட்டு அறிக்கைகளை சமர்ப்பித்து எல்லையற்ற இழப்பீட்டினை பெற சில அரசியல்வாதிகள் முயற்சிக்கின்ற காரணத்தினால், அரச மதிப்பீட்டு அதிகாரிகளும் பாரிய சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். பல அரசியல்வாதிகள் முன்வைத்துள்ள சேத விபரம் தொடர்பான அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாதென, விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸ் குழுக்களும் குறிப்பிட்டன.

“அழிவடைந்த சொத்துக்களுக்கு அதிக இழப்பீடு கோரி குறித்த அரசியல்வாதிகள் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில் அவர்கள் அந்த சொத்தை எவ்வாறு சம்பாதித்தார்கள் என அரசாங்கம் இதுவரை விசாரணையோ, கணக்காய்வோ செய்யவில்லை. குறித்த மதிப்பீட்டு அறிக்கைகள் யாவும் அரச கணக்காய்வு திணைக்களத்தின் ஊடாக கவனமாக கணக்காய்வு செய்யட வேண்டும் என்றும் கூடுதல் வருமானம் தொடர்பாக வருமான வரியை விதிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசாங்கம் இவ்வாறான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளுமாயின், போலி மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்த பல அரசியல்வாதிகள் தமது மதிப்பீட்டு அறிக்கையை மீளப்பெறுவர் என அவர்கள் நம்புகின்றனர்”

எனினும், இது சகல அரசியல்வாதிகளுக்கும் பொருந்தாது.

22. www.hirunews.lk

# ஆய்வின் பரிந்துரைகள்

1. மே 9 மற்றும் 10ஆம் திகதிகளின் நாடு முழுவதும் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சகல விசாரணைகளிலும் இருந்து வெளிப்படும் தகவல்கள் மற்றும் குறைகளை ஆவணப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் உண்மை ஆணைக்குழு போன்ற பொறிமுறையொன்றை ஏற்படுத்தவேண்டும்.

2. சம்பவ தினங்களில் பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கும் சட்டவிரோதமான செயற்பாடுகளை தடுப்பதற்கு பொலிஸாரும் ஏனைய பாதுகாப்பு தரப்பினரும் செயற்பட தவறியமைக்கான காரணத்தை கண்டறிய விசேட விசாரைணைகளை முன்னெடுக்கவும்.

3. குறித்த சம்பவங்களுக்கு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மற்றும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பு அல்லது பொறுப்பற்ற தன்மை குறித்து விசேட விசாரணை நடத்துதல்.

4. வன்முறையில் ஈடுபட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துதல்.

5. பிரதான ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக வன்முறையை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்ட சக்திகளை அடையாளம் காணவும். சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தால் அதற்கு காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒழுக்க நெறிமுறைசார்ந்த அறிக்கையிடல் தொடர்பாக, சம்பந்தப்பட்ட ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

6. வன்முறைக்கு சிறியளவில் பங்களிப்பு செய்த தரப்பினரை அடையாளம் கண்டு, நிபந்தனைகளுடன் கூடிய பொதுமன்னிப்பின் கீழ் அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் திட்டத்தை செயற்படுத்தல்.

7. வன்முறை காரணமாக தேசிய அளவில் ஏற்பட்ட சேத விபரங்களை துல்லியமாக மதிப்பிட்டு, அதனை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துதல்.

8. வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான இழப்பீட்டினை வழங்குவதற்கு இழப்பீட்டு செயன்முறையை ஆரம்பிக்கவும்.

9. பொதுமக்கள் வெறுப்புக்கு வழிவகுக்கும் அரசியல், சமூக, கலாச்சார மற்றும் உளவியல் காரணிகளை கண்டறிந்து, கொள்கை வகுப்பாளர்களுக்கும் சமூகத் தலைவர்களுக்கும் அதுபற்றி தெளிவூட்டவும்.

10. முரண்பாடுகளுக்குப் பின்னராக சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.



**Right to Life Human Rights Centre**
No. 56/02, Palitha Place, Colombo 09.
Tel/ Fax : 011 266 9100
E-mail : right2lifelk@gmail.com
Web : www.right2lifelanka.org